இந்தக் கடலில் நீண்ட நெடும் சுவர் கட்டும் திட்டத்தை உடனடியாக அரசு கவனத்தில் கொண்டு எந்த விதமாக அந்தப் பகுதி மக்களுக்கு அந்த விதமான ஆபத்து ஏற்படாத அளவில் செயல்பட வேண்டுமென்பதற்காக, அன்றாட நிகழ்ச்சிகளுக்கு உள்ளே இது வராது என்று திரும்பவும் கூறிக் கொண்டு இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து அந்தப் பகுதி மக்களுக்குப் பேராபத்து வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக சபையின் பிற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: குமரி மாவட்டத்தில் விளவங்கோடு அருகே இனயம் என்ற கிராமத்தில் 29—8—1970 இரவு கடல் தண்ணீர் ஊருக்குள் புகுந்ததின் விளைவாக 27 மீனவர் வீடுகள் இடிந்தன. 40 வயது மேரியா சில்வய் என்ற பெண்ணும், 9 வயதுடைய அவளுடைய பெண்ணும் சுவர் இடிந்து விழுந்ததனால் மரணமடைந்தனர். கடல் கொந்தளிப்பு இன்னும் அடங்கவில்லை. கிராம மக்கள் அவ்விடத்திலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்படுகின்றனர். துயர் தணிப்பு வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவன செய்து வருகிறார். நேற்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் இதுபற்றிக் கலந்து பேசி மேலும் எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வந்து இருக்கிறேன். ஆகவே, தகுந்த ஏற்பாடுகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்ற காரணத்தால் இதுபற்றி விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்துப் பேச வேண்டிய அளவிற்குரிய தீர்மானம் அல்ல என்பதை தங்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல்வர் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் பிற நடவடிக்கைகளை ஒத்திவைத்து இப்பொருள் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கருதுவதால் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

5. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 23-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளில் 23-வது விதியை தளர்த்தி இப்பேரவை இன்று தனியார் அலுவல்களை எடுப்பதற்கு முன்பு கீழ்க்கண்ட சாதாரண அரசினர் அலுவல்களை நடத்த வேண்டுமென்ற இத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.